Source: *Tamil Murasu*, p2
Date: 3 March 2016

இலவச சட்ட சேவை வழங்கிய ஏழு மாணவர்களுக்கு விருது

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் சட்டம் பயிலும் காலத்திலேயே பொதுமக்களுக்கு இலவச சட்ட சேவை வழங்கிய ஏழு மாணவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

இவர்களுடைய சேவையால் வயது வந்தவர்களுக்கு ஏற்படக் கூடிய பாதிப்பு, ராணுவ வழக்குகளில் நீதி கிடைப்பது, குற்றச் செயல்களில் தவறாக தண்டிக்கப் படுவது போன்ற அம்சங்களில் சிங்கப்பூரர்கள் பயனடைந்து உள்ளனர்.

இலவச சேவைக்காக சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகம் தனது மாணவர்களுக்கு விருதுகள் வழங்குவது இதுவே முதல் தடவை.

இதில் தனிப்பட்ட விருதுகள் வழங்கும் பிரிவுகளுடன் இலவச சேவைக்காக இரண்டு புதிய நிதி உதவித் திட்டங்களும் அறிவிக்கப் பட்டுள்ளன.

'என்யூஎஸ் 1992ஆம் ஆண்டு இலவச சேவை விருது' என்றும் 'ஆர்எச்டி லா டெய்லர் வெஸ்ஸிங் சுபாஷ் ஆனந்தன் விருது' என்றும் பெயரிடப்பட்டுள்ள இந்த இரண்டு நிதியுதவித் திட்டங்களும் மாண வர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு முறையே $2,500 மற்றும் $5,000 உதவித்தொகையை வழங்கும்.

"இலவச சட்ட சேவை மூலம் சட்டத் துறை சமுதாயத்திற்கு தன் பங்கை ஆற்றுகிறது. இதன்மூலம், நாம் சட்டத் துறையின் மேன்மையை நன்கு புரிந்துகொள்ளலாம்," என்று சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழக சட்டப் பள்ளியில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட சட்ட, நிதி அமைச்சுகளின் மூத்த துணை அமைச்சர் இந்திராணி ராஜா கூறினார்.

விருது பெற்றவர்களை குறிப் பிட்டுப் பேசிய குமாரி இந்திராணி ராஜா, "நீங்கள் இலவச சேவை வழங்கியபோது பல நிலைகளில் உள்ள மக்களைச் சந்தித்திருப் பீர்கள். அவர்களுக்கு உதவி செய்ய முடியும் என்று தெரிந்ததும் சேவை புரிவதில் நீங்கள் உற்சா கத்துடனும் மனநிறைவுடனும் பணியாற்றியிருப்பீர்கள்.

"சட்டக் கல்வி பயிலும் மாண வர்களாகிய நீங்கள் உங்களுடைய சட்ட அறிவையும் திறன்களையும் பயன்படுத்தி மற்றவர்களுக்கு உதவ முடியும் என்பதே அதற்குக் காரணம்," என்று அமைச்சர் சொன்னார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.